

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (21.08.2024), சென்னையில், மறைந்த துக்ளக் சோ ராமசாமியின் மனைவி திருமதி.சௌந்தரா ராமசாமி அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் மதியழகன், பாலவாக்கம் மனோகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர் தொகுதி

# பெருநகரில் 'மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்' க.சுந்தர் எம்.எல்.ஏ. மனுக்கள் பெறுகிறார்!

## க.செல்வம் எம்.பி. பங்கேற்பு! ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக. 22 -

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி பெருநகர் ஊராட்சியில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. ஆகியோர் பங்கேற்று பொதுமக்களிடம் மனுக்கள் பெறுகின்றனர். இது குறித்து ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் இன்று (22—08-2024 வியாழன்கிழமை) காலை 11.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் பெருநகர் ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலை பள்ளியில் பொது மக்களின் கோரிக்கைகளை மனுக்களாக பெற்று உடனடியாக தீர்வு காணும் 'மக்களுடன் முதல்வர் திட்டத்தை' மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் . மற்றும் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு பொது மக்களின் கோரிக்கைகளை மனுக்களாக பெற்று உடனடியாக உரிய அரசு அதிகாரியிடம் கொடுத்து உடனடியாக தீர்வு காண உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகர், துணைத் தலைவர் சுந்தரி குமார், உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

இந்த அற்புதமான வாய்ப்பினை பயன்படுத்தி பெருநகர், மானாம்பதி, விசூர், மானாம்பதி கண்டிகை, இளநகர் உள்ளிட்ட ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது நீண்ட கால பிரச்சனைகளை கோரிக்கை மனுக்களாக கொடுத்து தீர்வு கண்டு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்..

மேலும் நிகழ்ச்சியில் தலைமை கழக, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் இந்தியா கூட்டணியை சேர்ந்த அனைத்து நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### திருப்பத்தூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பேச்சுப் போட்டி!

## மாவட்ட அமைப்பாளர் வி.வடிவேல் அறிக்கை!

திருப்பத்தூர், ஆக. 22 -

தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பேச்சுப் பேரட்டி 25.8.2024 அன்று காலை 8 மணிக்கு ஸ்ரீ கோகுலம் மகால், சின்னகல்லுப் பள்ளி - மருதர் கேசர், ஜெயின் மகளிர் கல்லூரி அருகில் வாணியம்பாடியில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.வடிவேல் தலைமை தாங்குகிறார். துணை அமைப்பாளர் வி.வி.கிரிராஜ் வரவேற்கிறார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி.எஸ்.செந்தில்குமார், டி.எஸ்.தமிழ்மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டச் செயலாளர் க.தேவராஜி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் க.பிரபு, சி.என்.அண்ணாதுரை, டி.எம். கதிர்ஆனந்த், ஏ.நல்லதம்பி, ஏ.சி.வில்வநாதன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

மேலும் கே.புருஷோத்தமன், பி.எம்.முனிவேல், ஆர்.எஸ்.ஆனந்தன், ம.முத்தமிழ்ச்செல்வி, டி.கே. மோகன், ஏ.சம்பத்குமார், சாந்திசீனிவாசன், கே.பி. ஆர்.ஜோதிராஜன், எஸ். ராஜேந்திரன், என்.கே.ஆர். சூரியகுமார், எம்.ஆர்.ஆறுமுகம், வி.எஸ்.சாரதிகுமார், எஸ்.தாமோதிரன், ம.அன்பழகன், க.உமாகன்ரங்கம், ப.ச.சுரேஷ்குமார், எஸ். கே.சதீஷ்குமார், கே.ஆர். திருப்பதி, வி.எஸ்.ஞானவேலன், சி.கவிதாதண்டபாணி, கே.முருகேசன், கே.ஏ.குணசேகரன், டி.சாமுடி, டி. அசோக்குமார், ஏ.மோகன்ராஜ், ஏ. எம்.டி.சீனிவாசன், எம்.ஸ்ரீதர், ஏ.செல்வராஜ், எஸ்.உமாசந்திரன், டி.சந்திரசேகர், கு.ராஜமாணிக்கம், சி.சத்தியமூர்த்தி, எம்.அசோகன், ஆர்.டி.சாமுவேல்செல்லபாண்டியன், டி.ரகுநாத், எஸ்.அரசு, கே.சாமண்ணன், எம்.சத்தியநாராயணன், எம். .விமலன், எம்.குணசேகரன், எம்.ஏ.ஆர்.ஷபீர்அகமது, பி. கோவிந்தம்மாள் உள்ளிட்ட மாவட்டக் கழக முன்னோடிகள், முன்னாள் நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய,பேரூர் செயலாளர்கள், நிர்வாகி கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

நா.பெ.பிரபு நன்றி கூறுகிறார்.

### '69 சதவிகித இடஒதுக்கீடு 9வது அட்டவணையும் - ஒரு பார்வை' எனும் தலைப்பில்

# சென்னை - பெரியார் திடலில் சொற்பொழிவு!

## தக்கோலம் தேவபாலன் சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, ஆக.22-

69 சதவிகித இட ஒதுக்கீடு 9வது அட்டவணையும் - ஒரு பார்வை எனும் தலைப்பில் பெரியார் திடலில் தலைமைக் கழக சொற்பொழிவாளர் தக்கோலம் தேவபாலன் உரையாற்றுகிறார்.

இன்று (22.08.2024 - வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னையில் உள்ள பெரியார் திடலில் பெரியார் நூலக வாசகர் வட்ட தலைவர் வழக்கறிஞர் ஆ.வீரமர்த்தினி தலைமையுரை ஆற்றுகிறார்.


வழக்கறிஞர் தென்மாறன், பா.மணியம்மை, ஜெ.ஜனார்த்தன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தி.மு.க தலைமை சொற்பொழிவாளர் தக்கோலம் தேவபாலன் '69 சதவிகித இடஒதுக்கிடு 3வது அட்டவணையும் ஒரு பார்வை' என்ற தலைப்பில் உரையாற்றுகிறார்.

பெரியார் நூலக வாசகர் வட்ட செயலாளர் ஆ. வெங்கடேசன் நன்றியுரை ஆற்றுகிறார்.



திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் PMGSY திட்டத்தின் கீழ் பீமக்குளம் ஊராட்சி மந்தாரக்குட்டை முதல் மலைரெட்டியூர் வரை மதிப்பீடு ரூ.3.00கோடி தார்சாலை அமைத்தல் பணிக்கான துவக்க நிகழ்ச்சி திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கலந்துகொண்டு பணியை துவக்கி வைத்தார். உடன் ஒன்றியக்குழு பெருந்தலைவர் சங்கீதா பாரி, ஒன்றிய கழக செயலாளர்கள் தாமோதரன், ஞானவேல், ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊரக உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய்த் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டத்தை சார்ந்த 35 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாவை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# கேளம்பாக்கம் - வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் 'உணவே மருந்து' விழிப்புணர்வு நிகழ்ச்சி!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, ஆக.22-

செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம், வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் உணவேமருந்து விழிப்புணர்வு நிகழ்ச்சியினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம்மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம், வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் உணவே மருந்து விழிப்புணர்வு நிகழ்ச்சியினை குறு, சிறு மற்றும்நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் துவக்கி வைத்து, கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டனர்.

மேலும், உணவு பாதுகாப்பு துறையின் சார்பில் ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் உபரிஉணவினை வீணாக்காமல் பகிர்வோம் என்ற விழிப்புணர்வு வாகனத்தினை அமைச்சர் பெருமக்கள் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

2024ஆம் வருடம் சட்டமன்ற கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அறிவிப்புகளில் அறிவிப்பு எண் 106 உணவு பாதுகாப்பும் விழிப்புணர்வும் என்ற வகையில் "உணவே மருந்து" என்ற கூற்றின்படி ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் உணவு பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு உணவின் நன்மைகள், சரிவிகித உணவு முறை தவிர்க்க வேண்டிய உணவு வகைகள் பற்றிய விழிப்புணர்வும். இதில் ஆசிரியர் கையேடு. உணவு தூதர் குழு மூலம் மாணவர்கள் ஆரோக்கியமான வாழ்வுக்குத் தேவையான சரியான உணவை தேர்வை செய்யும் திறன் பெறுவார்கள் என்ற நம்பிக்கையில் இன்று VIT கல்லூரியில் உணவே மருந்து விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று இக்கல்லூரியில் அருகாமையில் உள்ள 7 கல்லூரிகள் மற்றும் 4 பள்ளிகளிலிருந்து மாணவ மாணவியர்கள் வருகை புரிந்து ள்ளது பாராட்டுதலுக்குரியதாகும்.

இங்கு வருகை புரிந்துள்ள கல்லூரி மற்றும் பள்ளிகளில் உணவு மற்றும் ஆரோக்கிய தூதுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் அவர்கள் தங்கள் பள்ளி கல்லூரிகளில் சரிவிகித உணவு முறை, தவிர்க்க வேண்டிய உணவுகள் பாதுகாப்பாற்ற உணவுகள். உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான உணவுகளை தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும். தினந்தோறும் உடற்பயிற்சி, உணவை வீணாக்காமல் இருப்பது போன்றவை பற்றி அவ்வப்போது மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இம்மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள் அங்கன்வாடி மையங்கள் மெட்ரோ ரயில் நிலையங்கள் ஆகியவற்றை FSSAIஆல் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கை நிறுவனங்களால் தணிக்கை செய்யப்பட்டு சமர்ப்பித்த அறிக்கையை பரிசீலினை செய்து இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையத்தால் ஆலந்தூர் மெட்ரோ நிறுவனத்திற்கு *Eat Right Station Five Star* மதிப்பீட்டுச் சான்றிதழும். கல்வி நிறுவனங்களான VIT சென்னை, *Great Lakes Institute of Management* மாமல்லபுரம். கல்லூரி மற்றும் மருத்துவமனை யுடன் கூடிய செட்டிநாடு கல்வி நிறுவனத்திற்கும். மற்றும் அங்கன்வாடி மையங்கள் ஆன கிளாம்பாக்கம், லத்தூர், அகரம், திருக்கழுக்குன்றம், வீராண குன்னம் ஆகிய ஏழு இடங்களுக்கு *Eat right Campus Five star* மதிப்பீட்டு சான்றிதழ்களும், கல்வி நிறுவனங்களில் செயல்படும் உணவு கூடங்களுக்கும் மற்றும் கொட்டமேடு, பண்டிதமேடு ஆகிய இடங்களில் செயல்படும் அங்கன்வாடி, மையங்களுக்கும் மொத்தம் 10 இடங்களுக்கு *Hygiene Rating* மதிப்பீடு சான்றிதழ்களும் தரப்பட்டு ள்ளது.

மாணவ மாணவியர்கள் அனைவரும் இன்றிலிருந்து உங்கள் உடல் நலனில் அக்கறையுடன் சரிவிகித உணவுகளை உட்கொண்டு தவிர்க்க வேண்டிய உணவுகளை தவிர்த்து நல்ல ஆரோக்கியத்துடன் நலமாக என்றும் வாழ வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ். பாலாஜி, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த ரமேஷ், திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி.உதயா கருணாகரன், மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் திருமதி.அனுராதா, வி.ஐ.டி. பல்கலை கழக வேந்தர் முனைவர். கோ.விஸ்வநாதன் மற்றும் அனைத்து துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


### மயிலாடுதுறை மாவட்டத்தில்

## ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் !

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு !



கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட அட்டணைப்படி அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக அவைத்தலைவர்கள் தலைமையிலும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கலந்துக்கொள்ள உள்ளனர். இந்த கூட்டத்தில் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தை சேர்ந்த மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் & நேரம் | ஒன்றிய, நகர, பேரூர் | இடம் |
|---|---|---|
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் வடக்கு ஒன்றியம் | அறிஞர் அண்ணா திருமண மண்டபம், செம்பனார்கோவில். |
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணி | மயிலாடுதுறை நகரம் | விஜய் மஹால், மயிலாடுதுறை |
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை மாலை 6.00 மணி | சீர்காழி மேற்கு ஒன்றியம் | சீர்காழி ஒன்றிய தி.மு.க அலுவலகம் சீர்காழி தென்பாதி. |
| 26.08.2024 திங்கட்கிழமை காலை 10.00 மணி | குத்தாலம் மேற்கு ஒன்றியம் | ஸ்ரீமதி திருமண மஹால் – கோமல் |
| 26.08.2024 திங்கட்கிழமை மாலை 3.00 மணி | மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் | பத்மவாசன் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |
| 27.08.2024 செவ்வாய்கிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் மத்திய ஒன்றியம் | அமிர்தயோகா மஹால் திருக்கடையூர், |
| 27.08.2024 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் கிழக்கு ஒன்றியம் | பி.எம்.எஸ். திருமணமண்டபம், மங்கைநல்லூர், |
| 28.08.2024 புதன்கிழமை காலை 10.00 மணி | சீர்காழி கிழக்கு ஒன்றியம் | அங்காளபரமேஸ்வரி மண்டபம் சரபோஜி அக்ரஹாரம், சீர்காழி, |
| 28.08.2024 புதன்கிழமை மாலை 4.00 மணி | கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் | அருண்பாலாஜி திருமண மண்டபம், கொள்ளிடம். |
| 29.08.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியம் | ரமாட்டி திருமண மண்டபம், இலுப்பூர் சங்கரன்பந்தல் |
| 29.08.2024 வியாழக்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் வடக்கு ஒன்றியம் | ஒன்றிய தி.மு.க அலுவலகம், குத்தாலம், |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை மேற்கு ஒன்றியம் | நாராயணி மஹால், மயிலாடுதுறை. |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி | சீர்காழி நகரம் | சீர்காழி ஒன்றிய தி.மு.க.அலுவலகம் சீர்காழி தென்பாதி. |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் | நிலவர் திருமண மண்டபம், மணல்மேடு, |
| 31.08.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் பேரூர் | குத்தாலம் ஒன்றிய தி.மு.க அலுவலகம், |
| 31.08.2024 சனிக்கிழமை மாலை 6.00 மணி | கொள்ளிடம் கிழக்கு ஒன்றியம் | ஆர்.எம்.ஆர்.திருமண மண்டபம், கடவாசல். |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் | அருண்மஹால், நல்லத்துக்குடி, |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி | வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் | காவியா திருமண மண்டபம், வைத்தீஸ்வரன்கோவில். |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி | தரங்கை பேரூர் | சீனிவாசா திருமணமண்டபம், பொறையார். |
| 02.09.2024 திங்கட்கிழமை காலை 11.00 மணி | மணல்மேடு பேரூர் | நிலவர் திருமணமண்டபம், மணல்மேடு, |

கூட்டம் குறித்து சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முறையாக கூட்டம் அழைப்பிதழ்களை அச்சிட்டு கிளை, வார்டுகள் தோறும் வழங்கி கழகத்தினர் பெருமளவில் கலந்துகொள்ள கூட்டம் ஏற்பாடு செய்திட வேண்டுகிறேன்.

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ..**
செயலாளர்,
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.